**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 59/2023 தேதி:02.12.2024**

**வா.சா. 2 – கார்த்திகைசெல்வி**

**குறுக்கு விசாரணை :** ( 3ம் பிரதிவாதி தரப்பில்)

எனக்கு பூர்வீகம் ஊர் வி.கரிசல்குளம் ஆகும். என் அம்மா கமலம் 2009 ஆண்டு திம்மாபுரத்தில் இறந்துபோனார். அவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் இதுவரை நான் வாங்கவில்லை. என் அம்மாவின் வாரிசு சான்றிதழ் பார்த்தால் அவரின் வாரிசுகள் யார் என்று தெரியவரும் என்றால் சரிதான். என் அப்பா போஸ் 11.09.1970 அன்று இறந்துபோனார். என் அப்பாவின் வாரிசுசான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். 14.02.1962 தேதியிட்ட என் தாத்தா சுப்பிரமணியதேவர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததற்குரிய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்யவில்லை. என் தாத்தாவிற்கு பிறகு சுப்பிரமணியன், போஸ், பேச்சியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி மூன்று நபர்கள் பெயரிலும் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததற்குரிய பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. 27.12.2010 அன்று தாவா சொத்தை பொறுத்து என் கணவர் 2ம் வாதிக்கு நான் தான பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தான பத்திரம் எழுதி கொடுத்த சமயத்தில் தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. தானபத்திரம் எழுதி கொடுப்பதற்கு முன்பாக கதிரேசன் மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் சேர்ந்து போதும்பெண்ணுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான் போலியாக எழுதிவிட்டார்கள். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரையம் பத்திரம் செல்லாது என்று வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல கோரியுள்ளேன். வா.சா.ஆ 7 ஆவணம் தானபத்திரத்தில் க.சுப்பிரமணிதேவர் காலத்திற்கு பிறகு அவரின் வாரிசுகளான சுப்பிரமணி மற்றும் போஸ் ஆகியோருக்கு தாவா சொத்து கிடைக்கபெற்றது என்றும் போசின் வாரிசு அடிப்படையில் தாவா சொத்து எனக்கு

கிடைக்கபெற்றது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 7 ஆவணத்தில் தாவா சொத்தை நான் புஞ்சையாக காண்பித்துள்ளேன். வா.சா.ஆ 7 ஆவணத்தில் 8 லக்க சொத்தில் வீடு காண்பிக்கவில்லை என்றால் சிறிய வீடு என்பதால் காண்பிக்கவில்லை. என் பெரியப்பா திருச்சுழி கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டினார். மேற்படி வங்கியிலிருந்து ஆவணங்களை எடுத்து பார்த்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். 1999 ஆண்டில் வாய்மொழியாக என் பெரியப்பா எனக்கு பாகம் பிரித்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் பெரியப்பா எனக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். அதில் நான் தரப்பினராக கையெழுத்து செய்துள்ளேன். என் பெரியப்பாவும் தரப்பினராக கையெழுத்து செய்துள்ளார். அதில் என் கணவரும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். மேற்படி குடும்ப ஏற்பாட்டு ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் பாகமான சொத்துக்களுக்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தின் வருவாய் ஆவணம் கதிரேசன் மற்றும் சக்திவேல் பெயரில் இருப்பதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். க.சுப்பிரமணியதேவர் பெயரில் 14.02.1962 தாவா சொத்து குறித்து கிரையபத்திரம் ஏற்பட்டிருந்தாலும் கடந்த 50 ஆண்டுகளாக பெரியகருப்பதேவரின் வாரிசுகளான கதிரேசன் மற்றும் சக்திவேல் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அனுபவத்தின் அடிப்படையில் மேற்படி கதிரேசன் மற்றும் சக்திவேலும் 28.08.2010 அன்று தாவா சொத்தையும் அதற்கு அருகில் உள்ள சொத்தையும் போதுபொண்ணுக்கு கிரையம் செய்துள்ள கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கிரையம் பாத்தியம் பெற்ற போதுபொண்ணு கடந்த 2011 ஆண்டில் மேற்படி இடத்தில் ஓட்டு வீடு கட்டினார் என்றால் சரியல்ல. அந்த ஓட்டு வீட்டிற்கு போதுபொண்ணு பெயரில் வீட்டு வரி ரசீது செலுத்தியுள்ளார்கள் என்றால் ஒரு வருடம் செலுத்தியுள்ளார். நாங்களும் வரி செலுத்தியுள்ளோம். 5 ம் பிரதிவாதியை நாங்கள் தான் வாடகைக்கு வைத்திருந்தோம். 5 ம் பிரதிவாதியை நாங்கள் வாடகைக்கு விட்ட விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு கொடுக்க கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தெரியாது. சுப்பிரமணியன் என்பவரின் வாரிசு சேகர் என்பவர் என் மீதும் இதர வாரிசுகள் மீதும்

சமூகம் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.109/2015 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் க.சுப்பிரமணியதேவரின் பாத்தியப்பட்ட சொத்துக்கள் மீது அரிதீயாக பாகம் செய்து கொடுக்க வேண்டி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இறுதி முடிவு ஏற்படுவதற்கு முன்பாக இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தும் அதில் உள்ள வீடும் போதுபொண்ணுக்கு பாத்தியப்பட்டு அவரால் தனித்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எந்த காலத்திலும் பாகமாக கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ 7 ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 ஆவணத்தில் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( 4 ம் பிரதிவாதி தரப்பில்)

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>அருப்புக்கோட்டை. |